O.S.No. 35/2018 நாள் 30.01.2026 PW 1 – திரு. ராஜாசுந்தரம்

(சாட்சி மீண்டும் உதவியாளரால் பிரமாணம் செய்யப்பட்டு அனுமதியின்பேரில் தொடர்ந்து குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்.)

குறுக்குவிசாரணை (1 முதல் 5 பிரதிவாதிகள்தரப்பில்)

நீதிமன்ற ஆணையர் அறிக்கை வரைபடங்களுடன் நீ.ம.சா.ஆ–1 ஆகும். வா.சா.ஆ–8 ஆவணத்தில் சர்வே எண். 1533/1 ஏ–ல் பிரிவின்றி பூமியில் உள்ளபடி 47.87 என்று கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ–8 ன் அசல் ஆவணம் எங்குள்ளது என்றால் நீதிமன்றத்தில்தான் தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ–8 ன்படி நான் வாங்கிய சொத்தை நீதிமன்ற மூலம் அடையாளம் கண்டு பிரித்து கொடுக்கவேண்டுமென்று பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் சரிதான். முதல் பரிகாரம் 1ம் பிரதிவாதிக்கு எதிராகத்தான் கேட்டுள்ளேன் என்றால் சரிதான். ஆ பரிகாரம் எந்த பிரதிவாதிக்கு எதிராக என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான்சொத்தை கிரையம் வாங்குவதற்கு முன்பு தாவா சொத்தை சென்று பார்த்தேனா என்றால் பார்த்தேன். 2 ஏக்கர் 12 செண்டில் நான் கிரையம் பெறும்போது எத்தனை கட்டிடங்கள் இருந்தது என்றால் கட்டிடங்கள் இல்லை. தற்போது எத்தனை கட்டிடங்கள் உள்ளது என்றால் ஒரு குடோனும், ஒரு கார்செட்டும் உள்ளது. மேற்படி கட்டிடங்களின் உரிமையாளர்களைத்தான் 1 முதல் 5 பிரதிவாதிகளாக சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். நான் 2018 ல் வழக்கு தாக்கல் செய்துள்ளநிலையில் மேற்படி கட்டிடங்கள் எப்போது கட்டினார்கள் என்றால் நான் வாங்கும்போது கட்டிடங்கள் இல்லை, அதற்குபிறகு நான் பார்த்தபோது கட்டிடங்கள் இருந்தது. வழக்கிற்கு முன்பு கட்டிடங்கள் கட்டப்பட்டிருந்ததா அல்லது வழக்கிற்கு பிறகு கட்டினார்களா என்றால் வழக்கிற்கு முன்பு கட்டிடங்கள் கட்டிவிட்டார்கள். வா.சா.ஆ–8 ல் 4 மாலில் யாருக்குரிய சொத்து என்று குறிப்பிடாமல் சர்வே எண்கள் மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மூலபத்திரமாக வா.சா.ஆ–11 நீதிமன்றத்திலிருந்து வழங்கப்பட்ட ஏல கிரைய சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ–11 20.04.2012 ஆம் தேதியிட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ–11 நீதிமன்றத்திலிருந்து வழங்கப்பட்ட ஏல கிரைய சான்றிதழில் 2 ஏக்கர் 12 செண்டில் புஞ்சை செண்ட் 50 என்றுதான் குறிப்பிட்டுள்ளார்கள் என்றும், 4 எல்கை மால்கள் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ–8 ல் உட்பிரிவை காண்பித்து சர்வே எண். 1533/1 ஏ–ல் உள்ள 50 செண்ட் எனக்கு கிரையம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ–11 ல் சொல்லியுள்ள 50 செண்ட் இடம் சர்வே எண். 1533/1 ஏ என்று

உட்பிரிவு செய்யப்பட்ட நிலையில் நான் என்ன பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் என்னுடைய சொத்தை கண்டறிய கேட்டுள்ளேன். மற்ற பிரதிவாதிகளுக்கும் சர்வே எண். 1533ல் தனித்தனி உட்பிரிவுகள் உள்ளது என்றால் அது பற்றி தெரியாது. உட்பிரிவு செய்தது தெரியாது என்றும், அறிவிப்பு கொடுக்காமல் உட்பிரிவு செய்தார்கள் என்றும் சொல்வது தவறு என்றால் சரியல்ல. வா.சா.ஆ–8 லேயே உட்பிரிவு செய்யப்பட்ட சர்வே எண் குறிப்பிட்டுள்ள நிலையில் உட்பிரிவு செய்யப்பட்டது செல்லாது என்று கூறுவது சரியல்ல என்றால் சரியல்ல. சர்வே எண். 1533/1ஏ–க்கு பரிகாரம் கோரியுள்ளநிலையில் நீதிமன்ற ஆணையரின் வரைபடத்தில் சர்வே எண். 1533/1ஏ–ல் 48.88 செண்ட் இருப்பதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். சர்வே எண். 1533/1ஏ–ல் கண்ட சொத்து நான் முதலிலேயே சரோஜா என்பவரிடமிருந்து கிரையம் பெற்ற சொத்தாகும். நான் சரோஜாவின் வாரிசுகளிடமிருந்து கிரையம் பெற்ற கிரைய பத்திரத்தில் பூமியில் உள்ள அளவுப்படி 49.087 செண்ட் என்று கூறியுள்ள அளவின்படி பூமியில் சொத்து இருப்பதாக ஆணையர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார் என்றால் 48.88 செண்ட் என்று குறிப்பிட்டுள்ளார். 50 செண்ட் வாங்கிவிட்டு, நிலத்தை அளந்து பார்த்தே பூமியில் உள்ள அளவுப்படி என்று 49.087 செண்ட் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அளந்துபார்த்துதான் வாங்கினேன். 1ம் பிரதிவாதி கிழக்கடைய 50 செண்டை வாங்கி 4 பக்கமும் காம்பவுண்ட் சுவர் போட்டு தனியாக உட்பிரிவு செய்து அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான், ஆனால் அவர் கூடுதலாக வைத்துள்ளார். ஏற்கனவே கிரையம் வாங்குவதற்கு முன்பு காம்பவுண்ட் சுவர் கட்டுவதற்கு முன்பு இருந்த கம்பிவேலியை எடுத்துதான் காம்பவுண்ட் சுவர் கட்டினார் என்றால் கம்பிவேலி இருந்தது போல் இல்லை. 2 ஏக்கர் 12 செண்ட் சொத்திற்கான ஆதி உரிமையாளர் N.K.D.ஆண்டவர் என்றால் 1ம் பிரதிவாதி வாங்கிய 50 செண்ட்டிற்கு அவர் உரிமையாளர். N.K.D.ஆண்டவர் 1982ல் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். N.K.D.ஆண்டவர் அதிக அளவுடைய சொத்தை எழுதிக்கொடுத்ததாக நான் கூறும் நிலையில் அவரின் வாரிசுகளை சேர்க்காமல் தாக்கல் செய்துள்ள வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் அவரிடமிருந்து 1ம் பிரதிவாதி கிரையம் பெற்றுவிட்டார். பிராதில் 1ம் பிரதிவாதி கூடுதல் அளவு சொத்தினை வைத்துள்ளார் என்று கூறியுள்ளநிலையில் சொத்தின் மீட்பு உரிமை கேட்காமல் கட்டிடங்களை இடிப்பதற்கு உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியுள்ளது நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 2 முதல் 5 பிரதிவாதிகள் எப்பொழுது கட்டிடங்கள் கட்டினார்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது. அவர்களும் கூடுதல் சொத்தை அனுபவத்தில்

வைத்துள்ளார்கள் என்று சொல்கிறேன் என்றால் சரிதான். கட்டிடம் கட்டியது எப்பொழுது என்று தெரியாததால் அதை தடுக்க நான் முயற்சி செய்யவில்லை என்றால் சரிதான், நான் அந்த இடத்தை சென்று பார்க்கசெல்லவில்லை. நான் எப்பொழுது இடத்தை பார்த்தேன் என்றால் கட்டிடம் கட்டி முடித்து 2,3 வருடம் கழித்துதான் பார்த்தேன். பிராதில் 2வது பரிகாரமாக கட்டிடத்தை இடிக்க வேண்டும் என்றுகேட்டுள்ளேன் என்றால் சரிதான். குடோன் கட்டியவர்கள் அவர்கள் சொத்திற்கு பின்புறம் உள்ள சொத்தையும் கிரையம் பெற்று சேர்த்துதான் கட்டியுள்ளார்கள் என்றால் சரிதான், மேற்படி சொத்து என்னுடையது என்று நான் உரிமை கோருகிறேன், ஆனால் அதை அவர் வேறு ஒருவரிடமிருந்து வாங்கியதாக சொல்கிறார், யாரிடமிருந்து வாங்கினார்கள் என்று இதுவரை சொல்லவில்லை. எனது சொத்துக்கு எத்தனை சொத்து தள்ளி 1ம் பிரதிவாதி சொத்து உள்ளது என்றால் அதற்காகத்தான் நீதிமன்றத்தில் பரிகாரம் கோரியுள்ளேன். எனது சொத்திற்கு கீழ்புரம் என்ன உள்ளது என்றால் காலியிடம் உள்ளது. மேல் பக்கம் என்ன உள்ளது என்றால் வேறு நபர் கிரையம் பெற்றுள்ளார். வடபக்கம் ரோடு உள்ளது. தென்பக்கம் வேறு ஒருநபருடைய பிளாட் உள்ளது. 1 முதல் 5 பிரதிவாதிகளின் சொத்து, எனது சொத்திற்கு எந்த பக்கம் உள்ளது என்றால் அதற்குத்தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நீதிமன்றத்திலிருந்து ஏலம் எடுத்தபிறகு அதை அளந்து அமீனா மூலம் டெலிவரி வாங்கியதற்கான வாரண்ட் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அதில் ஒப்படைத்த சொத்து எனக்கு கிடைத்தால் போதும் என்றால் சரிதான். நான் மேற்சொன்ன டெலிவரி வாரண்ட் வா.சா.ஆ–24 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ–24 ன்படி நீதிமன்றத்திலிருந்து அளந்து ஒப்படைக்கப்பட்ட பிறகு இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றுசொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.26 முதல் 28 வில்லங்கசான்றிதழில் 1 பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட கிரைய ஆவணங்களும் முன் கிரையங்களம் துலங்குகிறது என்றால் சரிதான். தற்போது பூமியில் என்ன உட்பிரிவுபடி நிலங்கள் உள்ளது என்று காட்டுவதற்கு வா.சா.ஆ–25 தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியாக தெரியவில்லை. நான் என் இடத்தை நீதிமன்றம் மூலம் ஒப்படைக்கப்பட்ட இடம் தவிர, பிரதிவாதிகளுடைய இடத்தை கட்டிடங்களை இடித்து ஒப்படைக்க வேண்டும் என்று கோருவது நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. எனக்கு நீதிமன்றத்தின் மூலம் ஒப்படைக்கப்பட்ட சொத்தில் பிரச்சனை ஏற்பட்டால் பழைய வழக்கில்தான் பரிகாரம் கோரவேண்டுமே தவிர புதிய வழக்கு தாக்கல் செய்ய முடியாது என்றுசொன்னால் சரியல்ல. நான் பாகப்பிரிவினை பரிகாரம்

கோரியிருக்கும் நிலையில் பழைய வழக்கின் தரப்பினர்களையும் இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்க வேண்டும் என்றுசொன்னால் சரியல்ல. எனது வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றாலும், தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றுசொன்னாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.